# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 129/மா/2022**
**நாள் : 10.9.2022**

திரு. S. முரளி (எ) மூர்த்தி,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–9,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், வரதராஜப்பேட்டை, மெயின் ரோடு, எண். 7/50, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. முரளி (எ) மூர்த்தி என்பவரின் 08.08.2022 நாளிட்ட மனு 11.08.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 129/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம், வரதராஜப்பேட்டை, மெயின் ரோடு, எண். 7/50, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. முரளி (எ) மூர்த்தி தனது முறையீட்டு மனுவில்,

> “நான் ஒரு சமூக ஆர்வலர். சமூக நலனில் ஆர்வம் கொண்டவன். நான் வசிக்கும் 112-வது வார்டு, பகுதி – 26, மண்டலம் - 9 பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்டது. இதில் ஒரு பாகமான 5 வழி சாலையான வரதராஜப்பேட்டை மெயின் ரோடு இங்கு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் தனி நபரான லிவ்யா சவுண்ட் சர்வீஸ் வைத்து நடத்தும் முருகன் என்ற நபர் சாலை மற்றும் கோவில், சிறுவர் பூங்கா ஆக்கிரமிப்புகள் செய்து கொண்டுவரும் முருகன் மீது ஓர் ஆண்டு காலமாக புகார் கொடுத்து வருகிறேன். அதன் அடிப்படையில் அரைகுறையான நடவடிக்கையை 112-வது வார்டு, AE பெரியசாமி, முருகனுக்கு ஊக்குவிப்பது போன்று உள்ளது. எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவம் கனம் ஐயா அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன். மேற்படி வரதராஜப்பேட்டை மெயின் ரோடு ஆக்கிரமிப்புகள் செய்யும் நபர்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு மட்டும் உபயோகிக்கப்படும் வகையில் இருந்திட உரிய நடவடிக்கை எடுத்து தக்க நீதி கிடைக்குமாறு தங்களை தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கைய்ய அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடம் (மண்டலம் -9) கோரப்பட்டது. அவர் தனது 30.8.2022 நாளிட்ட அறிக்கையில்,

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9, வார்டு – 112ல் வரதராஜப்பேட்டையில் உள்ள சிறுவர் விளையாட்டுத் திடலினை சுற்றிவுள்ள சுற்றுச் சுவரில் ஆக்கிரமிப்பு செய்து சவுண்ட் சர்வீஸ் கடையின் லைட்கள் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

மேற்கண்ட புகார் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்புகளை காவல் துறையின் உதவியுடன் கடந்த 26.08.2022 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதாக 30.8.2022 நாளிட்ட உதவி செயற்பொறியாளரின் மேற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதற்கான புகைப்படத்தையும் இணைத்துள்ளார் என்றும் மேற்கண்ட மனுதாரர் அளித்த புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது என இதன் மூலம் முறைமன்ற நடுவர் அவர்களின் கவனத்திற்கு தெரிவிக்கப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 1.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 1.09.2022 அன்று இம்முறைமன்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவிப் பொறியாளர் 1.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

“மனுதாரர் தெரிவித்துள்ள மண்டலம் - 9, வார்டு – 112ல் வரதராஜப்பேட்டையில் உள்ள சிறுவர் விளையாட்டுத் திடல் சுற்றுச் சுவரில் ஆக்கிரமிப்பு செய்து சவுண்ட் சர்வீஸ் கடையின் விளக்குகளை காவல்துறையின் உதவியுடன் கடந்த 25.8.2022 அன்று அகற்றப்பட்டுவிட்டன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, இந்நேர்வு தொடர்பாக புகைப்படத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், மண்டல அலுவலர் (மண்டலம்-9) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் 30.8.2022 நாளிட்ட இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் விளக்கமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு, மண்டலம் -9ன் மண்டல அலுவலரது 30.8.2022 நாளிட்ட அறிக்கை, மற்றும் மண்டலம் -9, வார்டு 112-ன் உதவிப் பொறியாளரது வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ளவை கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 9, பகுதி – 26, வார்டு 112 வரதராஜப்பேட்டை மெயின் ரோட்டில், திரு. முருகன் என்பவர் நடத்தி வரும் லிவ்யா சவுண்ட் சர்வீஸ் அங்குள்ள சாலை மற்றும் கோயில், சிறுவர் பூங்கா ஆகியவற்றை ஆக்கிரமிப்பு செய்து வருவதாகவும், இது குறித்து சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களிடம் ஓர் ஆண்டு காலமாக புகார் தெரிவித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்காததால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு மனு செய்துள்ளதும் தெரியவருகிறது.

மனுதாரர் திரு. S. முரளி (எ) மூர்த்தி என்பவரால் இம்முறைமன்றத்திற்கு 8.8.2022 அன்று மனு அளித்தவுடன் 17.8.2022 அன்று மனுதாரரின் புகார் குறித்து அறிக்கை கோரியதற்குப் பின்னர், 25.8.2022 அன்று சிறுவர் திடலைச் சுற்றியுள்ள சுற்றுச் சுவரில் மேற்குறிப்பிட்டுள்ள சவுண்ட் சர்வீஸ் மின்விளக்குகளை காவல் துறை உதவியுடன் அகற்றிவிட்டதாகவும் அதற்கு ஆதாரமாக இம்முறைமன்றத்தில் அளித்த புகைப்படங்கள் மூலமும் தெரியவருகிறது.

**விரிவான விசாரணைக்குப் பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:**

மனுதாரர் திரு. S.முரளி (எ) மூர்த்தி என்பவர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9, பகுதி – 26, வார்டு – 112, வரதராஜப்பேட்டை மெயின் ரோட்டில் திரு. முருகன் என்பவர் நடத்தி வரும் லிவ்யா சவுண்ட் சர்வீஸ் நிறுவனம், சாலை, கோயில் மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலைச் சுற்றிலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து ஓராண்டு காலமாக சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததற்கு இம்முறைமன்றம் தமது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், மனுதாரர் இம்முறைமன்றத்தில் அளித்த மனு மீது இம்முறைமன்றம் அறிக்கையை அளிக்கக் கோரி 17.8.2022 அன்று மண்டலம்-9ன் மண்டல அலுவலருக்கு கடிதம் அனுப்பிய பின்னரும் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல், 1.9.2022 விசாரணைக்கு ஆஜராகக் கோரி 22.8.2022 அன்று இம்முறைமன்றம் அழைப்பாணை அனுப்பிய பின்னர்தான், 25.8.2022 அன்று காவல்துறை உதவியுடன் சிறுவர் திடலின் சுற்றியுள்ள சுற்றுச் சுவரில் வைக்கப்பட்டிருந்த மின்விளக்குகள் அகற்றப்பட்டதாக வார்டு 112-ன் உதவிப் பொறியாளரது அறிக்கையை மேற்கோள்காட்டி மண்டலம்-9ன் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். னால், வார்டு 112-ல் உதவிப் பொறியாளரால் எப்பொழுது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன என அவரது அறிக்கையில் தெரிவிக்கவில்லை. இது முரண்பாடாக உள்ளது.

மேலும், மனுதாரர் மனு மீது விசாரணைக்கு இம்முறைமன்றம் உத்தரவிட்டப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மனுதாரர் ஆக்கிரமிப்பு குறித்து மனு அளித்து ஓராண்டு காலமாக மாநகராட்சி அலுவலர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்தபின் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதாக வார்டு – 112ன் உதவி பொறியாளரது அறிக்கையை மேற்கோள்காட்டி மண்டலம்-9ன் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. இது அலுவலர்களின் மெத்தனப்போக்கையே காட்டுகிறது. எனவே இவ்வாறு மெத்தனமாக, கடமை தவறி செயல்பட்ட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**இனி இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை ஏற்படுத்தாவண்ணம் எச்சரிக்கையாக செயல்படவும் ஆக்கிரமிப்பு செய்வோர் மீது சட்டவிதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் மாநகராட்சி அறிவுறுத்தப்படுகிறது.**

மேலும் மனுதாரர்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்கள் மீது ஆய்வு மேற்கொண்டு உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட கள அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறும், நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்து அனைத்து மண்டல அலுவலர்கள்/

உதவி ஆணையர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரைக்கிறது.

2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. முரளி (எ) மூர்த்தி,
7/50, மெயின் ரோடு,
வரதராஜப்பேட்டை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

2) மண்டல அலுவலர் / உதவி ஆணையர்,
112-வது வார்டு, மண்டலம் - 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
4, 4வது குறுக்குத் தெரு,
லேக் வியூ ரோடு, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

3) உதவி பொறியாளர்,
112-வது வார்டு, மண்டலம் - 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
4, 4வது குறுக்குத் தெரு,
லேக் வியூ ரோடு, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

4) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

5) கண்காணிப்புப் பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

12/9/22

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032